

திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கே.என்.நேரு மேற்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக் கொண்டார். உடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், வழக்கறிஞர் ஓம் பிரகாஷ், வழக்கறிஞர் பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் காஜாமலை விஜய் ,கண்ணன், மணிவண்ண பாரதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை பெற்றுக் கொண்டார். உடன் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன்எம்.பி உள்ளார்.

# தமிழ்நாட்டில் கத்திரி வெயில் தொடக்கம் !

## 28ம் தேதி வரை நீடிக்கும்!

சென்னை, மே 5-

அக்னி நட்சத்திரம் என்னும் கத்தரி வெயில் காலம் நேற்று தொடங்கி 28ம் தேதி வரை நீடிக்கும். இந்த நாட்களில் வெயில் கொளுத்தும், ஒரு சில இடங்களில் வெப்ப அலை வீசவும் வாய்ப்புள்ளது. இந்நிலையில், வேலூரில் நேற்று 109 டிகிரி வெயில் கொளுத்தியது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் நீண்ட கால அறிக்கையின்படி, இந்தியாவில் 11 நாட்களுக்கு ஒரு சில இடங்களில் வெப்ப அலை வீசும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சூரிய வெப்பம் பூமியில் விழுந்து வெளியேற முடியாமல் தரைப்பகுதியில் நிலை கொள்ளும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் நாட்டின் பெரும்பாலான இடங்களில் வெப்ப அலை வீச வாய்ப்புள்ளது. கடந்த 150 ஆண்டுகளுக்கு பிறகு இதுபோன்ற ஒரு நிலை தற்போது உருவாகியுள்ளது. கடந்த 1877ம் ஆண்டில் நாட்டில் சூப்பர் எல்நினோ ஏற்பட்டதால் 21 மாதங்கள் வெப்பம் நீடித்தது. அதேபோன்ற நிலை தற்போதும் உருவாகியுள்ளது. இதனால் பகல் நேரங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும். வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 5 டிகிரி செல்சியஸ் வரையில் அதிகரித்து 113 டிகிரி வரை வெயில் கொளுத்தும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக காலை 11 மணி முதல் மாலையில் 4 மணி வரையில் பொதுமக்கள் வெளியில் வர வேண்டாம் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கிழக்கு மற்றும் தென்கிழக்கு திசையில் இருந்து வீசிய காற்றின் காரணமாக தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மாலை மாவட்டங்கள் தொடங்கி தெற்கு கர்நாடகா வரையில் உள்ள பகுதிகள், தென் மாவட்டங்களில் கன்னியாகுமரி திருநெல்வேலி மாவட்டங்களிலும், விழுப்புரம், கடலூர், புதுச்சேரி பகுதிகளிலும் நேற்று கன மழை பெய்துள்ளது. உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சியாக இன்றும் தமிழகத்தில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கும். மேலும், வங்கக் கடல் மற்றும் அரபிக் கடல்களில் இரு வளி மண்டல காற்று சுழற்சி உருவாகும் சூழல் உருவாகியுள்ளது. அதற்கு முன்னோட்டமாக இலங்கை பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து ஆந்திர கடற்கரையை கடந்து மேற்கு நோக்கி பயணித்து அரபிக் கடல் பகுதிக்கு செல்லும் என்பதால் வட கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் வாய்ப்பு உருவாகியதால் திருவள்ளூர் மாவட்டத்தில் மழை பெய்துள்ளது.

இந்த நிகழ்வு உருவாவதற்கு முன்பே அரபிக் கடலில் ஒரு காற்று சுழற்சி உருவாகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. வங்கக் கடல் நிகழ்வு தமிழகத்தை நெருங்கி வருமா, விலகிச் செல்லுமா என்ற சந்தேகத்துக்கு இடையே, நல்ல மழை தமிழகத்தில் பெய்யும் என்று உறுதியாகியுள்ளது. இந்த மழை 3வது வாரம் வரையில் நீடிக்கும். இந்நிலையில், இன்றும் சில இடங்களில் மழை பெய்யும் வாய்ப்புள்ளது. வானம் மேகம் சூழ்ந்து காணப்படும். அதன் காரணமாக உயர் அடுக்கு மேகம் வெயிலை தடுத்துக் கொண்டு இருப்பதால் வெப்ப சலனம் ஏற்பட்டு வெப்பச் சலன மழை பெய்யும். படிப்படியாக மழை பெய்யும் வாய்ப்பும் உருவாகியுள்ளது. வங்கக் கடல் நிகழ்வு இலங்கை அருகே உருவாகியுள்ளது. மே மாதம் இது போன்ற நிகழ்வு உருவாவது அரிதான ஒன்று. இந்நிலையில், அக்னி நட்சத்திரம் என்னும் கத்தரி வெயில் காலம் தமிழகத்தில் நேற்று தொடங்கி 28ம் தேதி வரை நீடிக்கும். இந்த நாட்களில் வெயில் கொளுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் முன்னோட்டமாக தமிழகத்தில் கடந்த மாதம் தொடங்கி தற்போது வரையில் வெப்பம் அதிகரித்து அதன் தொடர்ச்சியாக வெயிலும் கொளுத்தி வருகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மட்டும் அதிகபட்சமாக 106 டிகிரி வரையில் வெயில் அதிகரித்துள்ளது.

தற்போது உருவாகியுள்ள கத்தரி வெயில் காரணமாக வெயில் சுட்டெரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், தற்போது கோடை மழை பெய்வதற்கான சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது. அதனால் அக்னி நட்சத்திர பாதிப்பு குறைவாக இருக்கும் என்றாலும் புழுக்கம் அதிகமாக இருக்கும். சில இடங்களில் அனல் காற்று வீசும். மாலையில் மழை பெய்து குளிர்விக்கும் நிலை உருவாகியுள்ளது. மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்யும். வெப்பத்தை தணிக்க அதிக தண்ணீர் குடிப்பதும், பழரசங்கள், மோர், உள்ளிட்ட குளிர்ச்சியான நீர் ஆகாரத்தை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில் நேற்று ஒருசில இடங்களில் மழை பெய்துள்ளது. குறிப்பாக மதுரை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவள்ளூர் மாவட்டங்களில் மழை பெய்துள்ளது. பெரும்பாலான இடங்களில் வறண்ட வானிலை நிலவியது. வேலூரில் அதிகபட்சமாக 109 டிகிரி வெயில் கொளுத்தியது. திருத்தணி 107 டிகிரி, சென்னை, ஈரோடு 106 டிகிரி, கரூர், திருப்பத்தூர், தர்மபுரி 104 டிகிரி வெயில் நிலவியது.

வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 4 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக இருந்தது. இதற்கிடையே, வளி மண்டலத்தில் சுமார் 1.5 கிமீ உயரத்தில் தெற்கு சத்தீஸ்கர் முதல் குமரிக்கடல் வரை, தெலங்கானா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு வழியாக ஒரு வளி மண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலைகொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும். மேலும், நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யும். இதேநிலை 9ம் தேதி வரை நீடிக்கும். அதிகபட்ச வெப்பநிலை குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கான வாய்ப்பு குறைவு. ஒரு சில இடங்களில் இயல்பைவிட 4 டிகிரி செல்சியசுக்கும் அதிகரித்து வெப்பநிலை காணப்படும். சென்னையில் வெயில் 106 டிகிரி வரை உயரவும் வாய்ப்புள்ளது. அதன் காரணமாக அசவுகரியம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

# ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த இந்திய எரிவாயு கப்பல்!

## 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும்!

புதுடெல்லி, மே 5-

ஹோர்முஸ் நீரிணையை இந்திய எரிவாயு கப்பல் கடந்துள்ளது.

‘எம்.டி. சர்வசக்தி’ என்னும் அந்த சரக்குக் கப்பல் வரும் 13 ஆம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகம் வந்தடையும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எம்.டி.சர்வ சக்தி என்ற சரக்குக் கப்பல், 46,313 மில்லியன்டன் எல்பிஜி எரிவாயு ஏற்றிக் கொண்டு ஹோர்முஸ் நீரிணையை சனிக்கிழமை கடந்தது. அந்தக் கப்பலில் 18 இந்திய மாலுமிகள் உள்பட மொத்தம் 20 மாலுமிகள் உள்ளனர்.

அந்த கப்பல் வரும் 13 ஆம் `தேதி ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அந்த கப்பல், ஓமன் வளைகுடாவில் நின்று கொண்டிருந்தது. இக் கப்பலில் உள்ள எரிவாயு மூலம் நாட்டில் அரை நாள் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் இடையேயான போர் தொடங்கிய பிறகு, ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து வந்த முதல் இந்திய எரிவாயு கப்பல் ‘சர்வ சக்தி’ ஆகும். இந்த கப்பல் தவிர, ஹோர்முஸ் நீரிணையை கடக்க முடியாமல் கடற்பகுதியில் இந்தியாவுக்குச் சொந்தமான 14 சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டு நின்று கொண்டிருக்கின்றன என்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேலுடனான போரின் காரணமாக, கச்சா எண்ணெய், எரிவாயு கப்பல்கள் அதிகம் செல்லும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது.

இதற்கு பதிலடியாக, ஈரான் துறைமுகங்களை அமெரிக்க கடற்படை கப்பல்கள் கடந்த சில நாள்களாக முற்றுகையிட்டுள்ளன.

இதனால் ஹோர்முஸ் நீரிணை வழியே கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் செல்வது பாதிக்கப்பட்டுள்ளது. இதில் இந்திய கப்பல்களும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு வங்க ஃபால்டா தொகுதியில்

# மே 21-ல் மறு தேர்தல் அறிவிப்பு!

கொல்கத்தா, மே 5 -

மே 21 அன்று மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மறு தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில், ஃபால்டா சட்டப் பேரவைத் தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மே 21 அன்று மறு தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த தொகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் மிகப்பெரிய அளவிலான முறைகேடுகள் நடந்ததாக பா.ஜ.க. குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்படி, மே 21 அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்றும், வாக்கு எண்ணிக்கை மே 24 அன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கேரளத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை கைப்பற்றுகிறது!

திருவனந்தபுரம், மே 5-

கேரளத்தில் உள்ள 140 சட்டமன்ற தொகுதிகளுக்கும் கடந்த மாதம் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

இத்தேர்தலில், பதிவான வாக்குகளின் எண்ணிக்கை நேற்று காலை தொடங்கி நடைபெற்று வருகிறது. சற்று முன் கிடைத்த தகவல்களின்படி, இடதுசாரி ஜனநாயக முன்னணி 40 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனநாயக முன்னணி 93 தொகுதிகளிலும் முன்னணி வகிக்கின்றன. பா.ஜ.க. கூட்டணி 3 தொகுதிகளில் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது.

எனவே கேரளத்தில் பத்தாண்டு இடைவெளிக்குப் பின் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி மீண்டும் ஆட்சி அமைக்கிறது.

## அசாம் மாநிலத்தில்

# பா.ஜ.க. ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளும் நிலை!

இம்பாலா, மே 5 -

அசாம் மாநிலத்தில் பா.ஜ.க. கூட்டணியில் அசாம் கன பரிஷத், ஐக்கிய மக்கள் கட்சி லிபரல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

காங்கிரஸ், அசாம் ஜாதிய பரிஷத் மற்றும் இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து கூட்டணியை அமைத்து போட்டியிடுகிறது.

126 தொகுதிகள் கொண்ட அசாம் மாநிலத்தில் ஏப்ரல் 9ம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்றது.

இத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று காலை முதல் எண்ணப்பட்டு வருகின்றன.

தற்போது வெளியாகி உள்ள தகவல்களின்படி, பா.ஜ.க. கூட்டணி 98 இடங்களிலும், காங்கிரஸ் கூட்டணி 26 தொகுதிகளிலும் முன்னணியில் உள்ளன.

## குஜராத் பல்கலையில்

# மோடி பற்றிய பாடம் சேர்த்ததற்கு கண்டனம்!

வதோதரா, மே 5-

குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள எம்.எஸ். பல்கலைக்கழகம் தனது சமூகவியல் பாடத் திட்டத்தில் மாற்றங்களைச் செய்து, ‘தேசபக்தி சமூகவியல்’ என்ற தலைப்பில் புதிய பாடங்களை சேர்க்க முடிவு செய்துள்ளது. வரும் ஜுன் மாதம் முதல் அமலுக்கு வரவுள்ள இந்த பாடத்திட்டத்தில் பிரதமர் மோடியின் தலைமைத்துவ பண்புகளை விளக்கும் ‘மோடி தந்து வங்கள்’ மற்றும் ஆர்.எஸ். எஸ். அமைப்பின் சமூகப் பணிகள், உள்ளடக்கிய வளர்ச்சி குறித்த பாடங்கள் இடம் பெற்றுள்ளன. இது தவிர சர்தார் வல்லபாய் படேல், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் மற்றும் சத்ரபதி சிவாஜி மகாராஜ் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இது பி.ஏ. சமூகவியல் 4ஆம் ஆண்டு மற்றும் எம்.ஏ. முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட உள்ளது. ஆனால் கல்வித்துறையில் அரசியல் புகுத்தப்படுவதாக காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது குறித்து காங்கிரஸ் கட்சித் தலைவர் தாரிக் அன்வர் குறிப்பிடுகையில்,

‘சுதந்திரப் போராட்டத்தில் எவ்வித பங்களிப்பும் செய்யாத தியாகங்கள் புரியாத அமைப்புகளைப் பாடப்புத்தகங்களில் புகழ முற்படுவது துர திர்ஷ்டவசமானது நாட்டில் நிலவும் கடுமையான விலைவாசி உயர்வு, வேலை வில்லா திண்டாட்டம் மற்றும் ஊழல் போன்ற முக்கிய பிரச்சினைகளிலிருந்து மசுகளின் கவனத்தைத் திசை திருப்பவே மோடி தத்துவங்கள் போன்ற பாடங்கள் கொண்டு வரப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட அரசியல் சித்தாந்தத்தைப் பல்கலைக்கழகங்கள் மூலம் மாணவர்களிடம் திணிப்பது கல்வித்துறையின் நடுநிலைத்தன்மையைச் சீர்குலைக்கும் என்று தெரிவித்தார்.

## சென்னை மெட்ரோ ரயிலில்

# ஏப்ரல் மாதத்தில் 90.18 லட்சம் பேர் பயணம்!

சென்னை,மே 5-

சென்னை மெட்ரோ ரயிலில் மார்ச் மாதத்தில் நாள்தோறும் 3.22 லட்சத்திற்கும் அதிகமானோர் பயணித்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதத்தில் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 3 லட்சமாகக் குறைந்து 90.18 லட்சம் பேர் பயணித்திருப்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், சென்னை மெட்ரோ ரயில் ஜனவரி மாதத்தில் 93.28 லட்சம் பேரும், பிப்ரவரியில் 96.4 லட்சம் பேரும், மார்ச் மாதத்தில் 1.01 கோடி மக்கள் பயணித்துள்ளனர். இது நாள்தோறும் சராசரியாக 3.22 லட்சம் பேர் பயணித்துள்ளனர். இந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதத்தில் 90.18 லட்சம் பேர் பயணித்துள்ளனர். அதில் தொடர் விடுமுறை நாளுக்கு முந்தைய நாளான ஏப்ரல் 2 ஆம் தேதிஅதிகபட்சமாக 3.65 லட்சம் பேர் பயணித்துள்ளனர். பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டதும், ஏப்ரல் மாதத்தில் வார இறுதி நாட்கள் நீட்டிக்கப்பட்டிருந்ததும் பயணிகளின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கியக் காரணங்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், அதிகமான பயணிகளை ஈர்க்கும் வகையில், ஐபிஎல் 2026 போட்டிகள் மற்றும் மாரத்தான் போன்ற பிற நிகழ்வுகளின் போது இலவசப் பயணங்களை வழங்குவது போன்ற ‘நிகழ்வு சார்ந்த பயணத் திட்டங்களை’ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

சிங்காரச் சென்னை அட்டை மூலம் 45.18 லட்சம் பேரும், பயண அட்டைகள் மூலம் 25, 659 பேரும், கியூ ஆர் குறியீடு பயணச்சீட்டைப் பயன்படுத்தி 44.74 லட்சம் பேரும், ஒரு முறை கியூ ஆர் குறியீடு டோக்கனைப் பயன்படுத்தி 17.83 லட்சம் பேரும் பயணம் செய்துள்ளனர். அதைத் தவிர இணையதள கியூ ஆர் குறியீடு மூலம் 1.23 லட்சம் பேரும், ஸ்டேடிக் கியூஆர் குறியீடு மூலம் 1.89 லட்சம் பேரும், கைபேசிகளில் வாட்ஸ்அப் மூலம் டிக்கெட் பெற்று 4.20 லட்சம் பேரும், பேடிஎம் மூலம் 2.82 லட்சம் பேரும், ஓஎன்டிசி மூலம் 11.48 லட்சம் பேரும் பயணம் செய்துள்ளனர்.

போன்பே முறையில் 2.39 லட்சம் பேரும், சிஎம்ஆர்எல் கைபேசி செயலி மூலம் 61, 393 பேரும், சென்னை ஒன் செயலி மூலம் 1.84 லட்சம் பேரும், கிரிக்கெட், இசை போன்ற நிகழ்ச்சிகளுக்கான கியூ ஆர் குறியீடு டிக்கெட் மூலம் 40,265 பேரும் மெட்ரோ ரயில்களில் கடந்த ஏப்ரல் மாதம் பயணித்துள்ளனர்.

மெட்ரோ ரயில்களில் என்ம எஸ்விபி, கியூஆர் குறியீடு பயணச்சீட்டு, வாட்ஸ் ஆப், பேடிஎம் செயலி, போன் பே மற்றும் சிங்காரச் சென்னை அட்டை போன்ற பயணச்சீட்டுகளைப் பயன்படுத்துவோருக்கு 20 சதவிகித சலுகைக் கட்டணம் வழங்கப்படுகிறது. ஆனால், காகித கியூஆர் குறியீடு பயணச்சீட்டுக்கு அச்சலுகை இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நகரத்தில் மெட்ரோ ரயில் பயன்பாடு குறைவாக இருப்பதற்கு, மெட்ரோ நிலையங்களிலிருந்து சேருமிடத்திற்குச் செல்லும் ‘இறுதி மைல் இணைப்பு’ வசதிகள் குறைவாக இருப்பதும், பிற போக்குவரத்து முறைகளுடன் மெட்ரோ சேவைக்கான ஒருங்கிணைப்பு பலவீனமாக இருப்பதும் முக்கியக் காரணங்கள் என்று நகர்ப்புறப் போக்குவரத்து வல்லுநர்கள் நீண்ட காலமாகச் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

“முதல் கட்ட வழித்தடங்களில் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு முக்கியக் காரணம், மெட்ரோ ரயில்கள் நகரத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டுமே இணைப்பதே ஆகும். இரண்டாம் கட்ட வழித்தடங்கள் பயன்பாட்டிற்கு வரும்போது, முதல் கட்ட வழித்தடங்களிலும் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும். இது தில்லி மெட்ரோவில் நிகழ்ந்துள்ளது; இங்கும் அதுவே நடக்கும்,” என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவன முன்னாள் அதிகாரி ஆர். ராமநாதன் தெரிவித்தார்.